செ. கு. எண்: 157 நாள்:24.06.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 24.6.2013

நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், காவல் தொலைத் தொடர்பு பிரிவில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. K.வெங்கடாசலம் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 5.6.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், அரகண்டநல்லூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. N.ராமு அவர்கள் 6.6.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

தூத்துக்குடி மாவட்டம், எட்டையாபுரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. R.கிருஷ்ணன் அவர்கள் 2.6.2013 அன்று எட்டையாபுரம் அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது தவறி கீழே விழுந்ததில், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 6.6.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

பெரம்பலூர் மாவட்டம், வி.களத்தூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. A.ராதாகிருஷ்ணன் அவர்கள் உடல்நலக் குறைவால் 6.6.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

சிவகங்கை மாவட்டம், பூலான்குறிச்சி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. A.அர்ஜுனன் அவர்கள் 7.6.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர் பேட்டை, தமிழ்நாடு சிறப்பு காவல்படை, 10-ம் அணியில் இரண்டாம் நிலை காவலராக பணி புரிந்து வந்த திரு. A.வேலு அவர்கள் 7.6.2013 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் கொல்லுமேடு

கிராமம், காட்டுமன்னார்கோயில் – கந்தகுமரன் சாலை அருகே சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி மேற்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. மணிசேகரன் அவர்கள் 2.6.2013 அன்று உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 10.6.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், தூக்கனாம்பட்டி, மேட்டூர் அணை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. புவனேஸ்வரன் அவர்கள் உடல்நலக் குறைவால் 10.6.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. P.தனசேகரன் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 13.6.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.பழனி அவர்கள் உடல்நலக் குறைவால் 14.6.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர் வெங்கடாசலம்; சிறப்பு உதவி ஆய்வாளர்கள் ராமு, கிருஷ்ணன், மணிசேகரன், பழனி; தலைமைக் காவலர்கள் ராதாகிருஷ்ணன், அர்ஜுனன், புவனேஸ்வரன், தனசேகரன்; மற்றும் இரண்டாம் நிலைக் காவலர் வேலு ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல்நலக் குறைவால் காலமான உதவி ஆய்வாளர் வெங்கடாசலம், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் மணிசேகரன், பழனி, தலைமைக் காவலர்கள் ராதாகிருஷ்ணன், புவனேஸ்வரன், தனசேகரன்; மாரடைப்பால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் ராமு, தலைமைக் காவலர் அர்ஜுனன்; சாலை விபத்தில் உயிரிழந்த சிறப்பு உதவி ஆய்வாளர் கிருஷ்ணன் மற்றும் இரண்டாம் நிலைக் காவலர் வேலு ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**